## கொழும்புப் பல்கலைக்கழகக் கலைப் பீடப் பட்டமுன் மாணவர்களுக்கான நிகழ்நிலைப் பரீட்சை (Online Examination) வழிகாட்டிகள் - 2020/2021

கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் 2020 ஆம் ஆண்டின் 19 இலக்கச் சட்டத்தின் பிரகாரம் (விசேடப் பிரிவு) கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, கொழும்புப் பல்கலைக்கழகக், கலைப் பீடம் பட்டமுன் மாணவர்களுக்கான பரீட்சைகளை நிகழ்நிலைத் தளங்களினூடாக நடாத்தவுள்ளது.

**கற்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு வழிகாட்டுதல்களை LMS இல் பார்க்கவும்.**

### பரீட்சைகளுக்கு முன்னர் (Pre-Examination)

1. முதலாம் பருவப் பரீட்சை 2020/2021 நிகழ்நிலை ஊடாக நடைபெறும்.

2. தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre -IDC) குறிப்பிடப்பட்ட இறுதி தினத்தினுள் மாணவர் தகவல் முறைமையினைப் (Student Information System - SIS) பயன்படுத்தி பரீட்சைகளுக்காகப் பதிவுசெய்தல் வேண்டும்.

3. பதிவுசெய்த மாணவர்கள் அவர்களது அனுமதி அட்டைகளைப் பரீட்சைக் கிளையிலிருந்து அவர்களது SIS கணக்கில் பெற்றுக்கொள்வர். அனுமதி அட்டைகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களுக்கு பரீட்சைக் கிளையின் பிரதி பதிவாளரை dr@exam.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் அல்லது 011 2500712 / 0112585972 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

4. மாணவர்கள் தமது அனுமதி அட்டையை SIS இல் இருந்து பதிவிறக்கம் செய்து, அதனை மென் பிரதிகளாகவும் (soft copy), வன் பிரதிகளாகவும் (hard copy) சேமித்து வைத்திருக்கவும்.

5. தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் மையத்தினால் (Information and Documentation Centre -IDC) பரீட்சை நேர அட்டவணை LMS தளத்தினூடாக மாணவர்களுடன் பகிரப்படும்.

6. மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திற்குமான வினாத்தாள்களைப் பரீட்சை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். பரீட்சை LMS இன் ஊடாக மேற்கொள்ளப்படும் கணிப்பீடாக இருந்தால், பரீட்சை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது திகதியில் பொருத்தமான LMS பக்கத்தில் குறித்தக் கணிப்பீடு தயாராக இருக்கும் (வினாத்தாளின் தொடர்புடையப் பகுதியில் குறிப்பிடப்படும் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் பல்தேர்வு மற்றும் ஏனைய வகையான வினாக்களுக்கான - MCQ/Quiz type questions விடைகளை LMS இல் அளிக்க வேண்டும்).

7. மாணவர்களுக்கு **ஓர் எழுத்துக் கணிப்பீட்டினைப் பூர்த்திசெய்து,** அதனை Learning Management System (LMS) இல் தொடர்புடைய கற்கைப் பக்கத்தின் ஊடாகச் சமர்ப்பிப்பதற்கு **5 மணித்தியாலங்கள்** வழங்கப்படும்.

8. பரீட்சை ஏற்பாடுகள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின், எழுத்து மூலமாக துறைத் தலைவர்/ அலகு ஒருங்கிணைப்பாளருக்கு நேரடியாக அனுப்பப்படல் வேண்டும்.

**பரீட்சைகளின் பொழுது (During Examinations)**

1. மாணவர்கள் பரீட்சைக்கு அமரும் ஒவ்வொரு தடவையும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் தமது அனுமதி அட்டையின் நகலை ( PDF வடிவமாக) பதிவேற்ற வேண்டும். பதிவேற்றம் செய்யப்பட்ட அனுமதி அட்டை பாடப்பிரிவுக்கு தொடர்புடைய ஒவ்வொரு கூண்டிலும் பரீட்சார்த்தியின் கையொப்பத்தைத் தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும்.

2. மாணவர்கள் LMS இல் உள்நுழைந்து, பரீட்சை நேர அட்டவணையின் பிரகாரம் **பொருத்தமான கற்கைப் பக்கத்திற்குச்** சென்று வினாத்தாளைப் பதிவிறக்கம் (download) செய்துகொள்ள வேண்டும்.

3. வினாத்தாளினைப் பதிவிறக்கம் செய்ய முடியாவிடின், கலைப் பீடத்தின் பிரதிப் பதிவாளரை தயவுசெய்து drmedfac@med.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது 0714418483 என்ற இலக்கத்தினூடாகத் தொடர்புகொள்க.

4. வினாத்தாள் தொடர்பாக பரீட்சார்த்திகளுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்பட்டால், பரீட்சைக் காலத்தில் மேற்பார்வையாளராக இருக்கும் குறித்த விரிவுரையாளரைத் தொடர்புகொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் பிரகாரம் கணிப்பீடுகளை உரிய நேரத்திற்குள் பூர்த்திசெய்வது மாணவர்களின் பொறுப்பு ஆகும்.

6. அனைத்து விடைத்தாள்களும் கட்டாயம் **கைகளால் எழுதப்படல் (handwritten)** வேண்டும். A4 அளவுடையத் தாளில் (ruled/lined paper/ or otherwise) உமது விடைகளை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு **கறுப்பு குமிழ் முனைப் பேனையினைப் (black ball point pen)** பயன்படுத்த நீர் அறிவுறுத்தப்படுகின்றீர். தயவுசெய்து உமது கையெழுத்து தெளிவாக இருப்பதை உறுதிப்படுத்தவும். தேவையெனில் கணிதக் கணிப்புகளுக்காக Excel Sheets இனைப் பயன்படுத்த முடியும்.

7. ஒவ்வொரு விடைத்தாளின் மேற்பகுதியின் வலது பக்கத்தில் உமது சுட்டெண்ணை தயவுசெய்து எழுதுக. விடைத்தாளின் எந்தவொரு இடத்திலும் உமது பெயரினை தயவுசெய்து எழுத வேண்டாம்.

8. பின்வரும் முறையினைப் பயன்படுத்தி தயவுசெய்து விடைத்தாள்களுக்கானப் பக்க இலக்கங்களை (number the pages) தாளின் கீழ்ப் பகுதியில் (bottom of the page) இடவும். உதாரணமாக உமது விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை 5 எனில், பின்வருமாறு 1/5, 2/5… என பக்க இலக்கங்கள் இடப்படல் வேண்டும்.

9. உமது விடைத்தாளின் முதல் பக்கமாக பொதுவான முகப்புப் பக்கத்தை (common front page LMS இல் வழங்கப்படும்) பயன்படுத்தவும் (பின்னிணைப்பு I). **உமது கணிப்பீட்டின் முதல் பக்கமாக இருக்க வேண்டிய முகப்புப் பக்கத்தை நீர் அச்சிடலாம் அல்லது கைகளினால் எழுதலாம் என்பதை தயவுசெய்து நினைவிற் கொள்க.**

10. விடைத்தாளின் முகப்புப் பக்கத்தில் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படல் வேண்டும்.

11. **பதிவேற்றுவதற்கான வழிகாட்டல்கள் (Guidelines for uploading)**
    - **a.** பக்க இலக்கங்களின் ஒழுங்கின் பிரகாரம் உமது விடைத்தாள்களை ஸ்கேன் செய்து (scan) அல்லது புகைப்படங்களாக (take photos) எடுத்து அதனை **ஒரு தனித்த PDF கோப்பாக** (a single PDF file) மாற்றுக. கணிதக் கணிப்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட Excel Sheets அவ்வாறே பதிவேற்றம் செய்ய முடியும்.
    - **b.** ஸ்கேன் செய்யப்பட்ட படத்தில் முழு பக்கமும் சரியாகக் கவரப்பட்டிருப்பதையும், அவை தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்துகொள்க.
    - **c. தனிப்பட்டப் பக்கங்களைத் தனித்தனியாக LMS இல் பதிவேற்றம் செய்ய முடியாது என்பதை நினைவிற் கொள்ளவும்.**
    - **d. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு கோப்பு வடிவம் PDF** என்பதை நினைவிற்கொள்க.
    - **e. PDF கோப்பு (file) பரீட்சார்த்தியின் சுட்டெண்ணைக் கொண்டு கட்டாயம் பெயரிடப்படல் வேண்டும். உதாரணமாக: A 12345**
    - **f. JPEG/JPG அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில்** உமது விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்வதற்கு **நீர் அனுமதிக்கப்படமாட்டீர்.**

12. மாணவர்கள் தமது விடைத்தாள்களைச் சமர்ப்பித்தப் பின்னர் சமர்ப்பித்ததற்கான ஒப்புதலாக LMS இன் முழுப் பக்கத்தினை **'சமர்ப்பிக்கப்பட்டது'** என்ற வார்த்தையுடன் ஸ்கிரீன் ஷாட் (screen shot) எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

13. குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான விடைத்தாள்கள் **மதிப்பீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதவை** என்பதைக் கருத்திற்கொள்க.

14. உமது பரீட்சையின் இறுதித் தினத்தில், கையொப்பம் இடப்பட்ட அனுமதி அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் உமது பதிவு ஆண்டுக்கு (admission year) தொடர்புடைய இணைப்பு மூலம் LMS இல் பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

## சிக்கல்களைத் தீர்த்தல் (Troubleshooting)

1. மாணவர்கள் தமது நேரத்தை நியாயமான முறையில் நிர்வகிக்க அறிவுறுத்தப்படுகின்றனர். இதனால் எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய எந்ததொரு தொழில்நுட்ப அல்லது இணைய இணைப்பு (internet connectivity) சிக்கல்களை ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

2. பரீட்சைக் காலத்தில் தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்பட்டால் (பதிவிறக்குதல் அல்லது பதிவேற்றுதல்) பரீட்சார்த்திகள் உடனடியாக LMS நிர்வாகி திரு. தக்சின திஸ்ஸநாயக்கே அவர்களை lmsadmin@arts.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் அல்லது 0773797909 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொள்ளலாம்.

3. LMS இல் விடைத்தாளைப் பதிவேற்றுவதில் எதிர்பாராத விதமாக தொழில்நுட்பச் சிக்கல் ஏதேனும் ஏற்படின், ஒரு பரீட்சார்த்தி தனது விடைத்தாளை கீழே தரப்பட்டுள்ள உமது பதிவு ஆண்டுடன் தொடர்புடைய மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

| | |
|---|---|
| 1 ஆம் வருடம் | exam1@arts.cmb.ac.lk |
| 2 ஆம் வருடம் | exam2@arts.cmb.ac.lk |
| 3 ஆம் வருடம் | exam3@arts.cmb.ac.lk |
| 4 ஆம் வருடம் | exam4@arts.cmb.ac.lk |

4. அத்தகைய மின்னஞ்சல் சமர்ப்பிப்புகளில் **பரீட்சார்த்தியின் பாடநெறிக் குறியீட்டையும் (course code), சுட்டெண்ணையும் (index number ) மின்னஞ்சலின் தலைப்பு வரியில் (subject line) தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக: ECN2123 A36789**

## பரீட்சைகளில் தவறான நடத்தை (Examinations Misconduct)

1. பரீட்சை முறைகேடு தொடர்பான அனைத்து விதிகளும் நிகழ்நிலைப் பரீட்சைகளின் (online examinations) போதும் பிரயோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு இதன்மூலம் பின்வரும் விதிகள் குறிப்பாக நினைவுப்படுத்தப்படுகின்றன:

- சமர்ப்பிக்கப்பட்ட விடைத்தாள்கள் அனைத்தும் மாணவர்களின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். குறிப்பிடப்படும் எந்தவொரு மூலமும் (source) பொருத்தமான வழிமுறையைப் பின்பற்றி ஒப்புக்கொள்ளப்படல் (properly acknowledged) வேண்டும்.

- உமது விடைகளை எழுதுவதில் ஏதேனும் வகையிலான உதவிகளைப் பெற்றுக்கொள்வது அல்லது வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி வழங்குதல் போன்றவற்றைத் தவிர்க்கவும்.

- விடைகளை ஸ்கிரீன் ஷாட்களாக எடுப்பதிலிருந்தோ (taking screenshots), அதனை வேறு எந்தவொரு நபருடனும் பரிமாறிக்கொள்வதிலிருந்தோ அல்லது வேறு எந்தவொரு ஊடகங்கள் மூலமாகவும் வினாக்கள் மற்றும் / அல்லது விடைகளை நகலெடுத்துப் பிரதி பண்ணுவதையோ (copying and pasting questions and/ or answers) தவிர்க்கவும்.

- ஒதுக்கப்பட்டப் பரீட்சைக் காலத்தில் பாடம் தொடர்பான விடயங்களைத் தெளிவுப்படுத்துவதற்கான எந்தவொரு கோரிக்கைகளையும் இடுகையிடுவதைத் (posting) தவிர்க்கவும்.

2. எந்தவொரு பரீட்சை முறைகேடு நடத்தைக்கும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், எந்தவொரு பரீட்சார்த்திக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நினைவிற் கொள்க.

******

**பின்னிணைப்பு I**

## மாணவர்களுக்கானப் பிரகடனப் படிவம்

**நான்காம்/மூன்றாம்/இரண்டாம்/முதலாம் வருட கலைமாணிப் பரீட்சை -**

**முதலாம் பருவ இறுதிப் பரீட்சை 2020/2021**

**கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

பாடத் தலைப்பு -

பாடக் குறியீடு -

சுட்டெண் -

| வினா இலக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |

விடைத்தாளின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பிப்புத் திகதி -

என்னால் சரியான முறையில் பயன்படுத்தப்பட்ட உசாத்துணைகள் (references) தவிர, இக்கணிப்பீடு எனது சொந்தப் படைப்பு எனப் பிரகடனப்படுத்துகின்றேன். மற்றொருவரின் படைப்பினை எனது சொந்தமாக சமர்ப்பிப்பது ஒரு பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

……………………………

கையொப்பம்